நமது தேசத்தின் பலமே மனிதவளம்தான். இந்தத்திறன் மிக்க மனித வளத்தை சரியாகப் பயன்படுத்துகிறோமா? என்றால் அது மிகப்பெரிய வினாவாகத்தான் இருக்கிறது. மனித வளத்தை முறையாகப் பயன்படுத்தத் தெரியவில்லையா? அல்லது பயன்படுத்தப் படவில்லையா? என்பதிலும் நாம் புரிதலற்று இருக்கிறோம் என்பதையும் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். நேற்றுவரையில் மனித வளத்தை சரியாகப் பயன்படுத்தாமல் விட்டதற்காக கவலைப்படாதீர்கள். எப்படிப் பயன்படுத்துவது? என்பதை நான் கற்றுத்தருகிறேன் என்று 1,500க்கு மேற்பட்ட பயிற்சி வகுப்புகளை நடத்திப் பல வெற்றியாளர்களை உருவாக்கி வருகிறார் கவி. முருக பாரதி. இன்று தமிழகத்தில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய மனித வளப் பயிற்சியாளர்களில் இவரும் ஒருவர். மனித மேம்பாட்டுக்கான பயிற்சிகளின் முக்கியத்துவத்தை நந்தவனம் வாசகர்களுக்காக நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்.

# முன்னேற விரும்பும் அனைவருக்கும் பயிற்சிகள் தேவை




**? தாங்கள் மனித வள மேம்பாட்டுத் துறைக்கு வந்ததன் நோக்கம் என்ன?**

மனித வளம் என்பது, மனிதர்களுக்குள் இருக்கும் வளங்களான மனோபாவம் ***(Attitude)***, அறிவு ***(Knowledge)*** மற்றும் திறமை ***(Skill)*** ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும். இந்த வளங்களை மேம்படுத்திக்கொள்ள, மற்றவர்களுக்கு உதவுவதே, நான் இந்தத் துறைக்கு வந்ததன் நோக்கம். என் பேச்சு, நான் பலன் பெற அல்ல; மற்றவர்கள் பயன் பெறவே..! நான்கு ஆண்டுகளுக்கு முன், எனக்குத் தொண்டையில் அறுவை சிகிச்சை செய்த பின், இனி மேடைகளில் பேசவே கூடாது; மீறிப் பேசினால், விரைவில் ஊமை ஆகிவிடுவீர்கள் என மருத்துவர்கள் எச்சரித்தனர். ஆனாலும், மற்றவர்களின் நன்மைக்காகவே தொடர்ந்து பேசி வருகிறேன். காரணம்...

## நேர்காணல்

எனக்கு இது தொழில் அல்ல; தவம்..! இந்த தவத்தின் அடிப்படை - நம்பிக்கை.

நான் மனிதர்களை குறிப்பாக இளைஞர்களை, மிகவும் நம்புகிறேன். அவர்களை என்னால் ஈர்க்க முடியும் என நம்புகிறேன். அவர்கள் தங்களிடம் இருக்கும் வளங்களை முறையாகப் பயன்படுத்த முடியும் என்று நம்புகிறேன். அவர்களின் வளங்களை மேம்படுத்திக்கொள்ள என்னால் வழிகாட்ட முடியும் என நம்புகிறேன். இந்த வளங்களை மேம்படுத்துவதன் மூலம் அவர்கள் தங்கள் வாழ்வையும், சமூகத்தையும் மேம்படுத்த முடியும் என்று நம்புகிறேன். அதன் மூலம், என் இந்தியத் திருநாட்டை மேன்மை பெறச் செய்ய முடியும் என்று நம்புகிறேன். விளம்பரத்தில் சொல்வது போல, "நம்பிக்கை..! அதானே எல்லாம்..!"



### மனிதவளம் இங்கே நிறைய இருந்தும் வளர்ச்சியில் பின்தங்கி உள்ளோமே ஏன்?

என் கருத்தில், மனித வளம் முழுப் பயன் தராமல் இருப்பதற்கு, இரண்டு தரப்பினர் காரணமாகிறார்கள். ஒன்று, கருத்துகளைச் சொல்பவர்கள். இன்றைய நிலையில், சொல்லும் இடத்தில் உள்ளவர்களில் பெரும்பாலானோர், தாங்கள் சொல்வதைக் கடைப்பிடிப்பவர்களாக இல்லை. அவர்களின் நோக்கம் சரியானதாக இல்லை. எனவே கேட்பவர்களிடம் தாக்கம் குறைவாகவே உள்ளது. மேலும், சரியானதையும் கூட சரியான மொழியிலோ, சரியான வழியிலோ கூறுவதில்லை.

இரண்டாவது, கருத்துகளைக் கேட்பவர்கள். இந்தியாவில் 120 கோடி மக்கள் இருக்கிறார்கள். ஆனால், நாடு முன்னேறத் தேவை நற்குடிமக்கள். அதாவது... சமூகப் பொறுப்புணர்வு கொண்டவர்கள். சொல்பவர்களைக் கொண்டாடுவதோ அல்லது குறை சொல்வதோ இல்லாமல், சொல்வது சரியானதாக இருந்தால் அந்தக் கருத்தை, வழியை மட்டும் பின்பற்றும் பெருங்கூட்டம் வேண்டும். நல்லனவற்றை, மாற்றங்களைத் தங்களிடமிருந்து தொடங்குபவர்களாய் இருந்து செயல்பட வேண்டும்.

### இன்றைய அவசர காலத்தில் நீங்கள் சொல்வதை கேட்க நேரம் ஒதுக்குகிறார்களா?

பெரும்பாலும், பங்கேற்பாளர்கள் அழைத்தும் இழுத்துமே வரப்படுகிறார்கள். காரணம், பயிற்சிகளின் நன்மைகள் இன்னும் உணரச் செய்யப்படவில்லை. வந்த பிறகு, அவர்களைக் கேட்க வைப்பது, ஒரு பயிற்றுநரின்

திறமையைச் சார்ந்தது. மிகக் குறைவானவர்களே, சுய விருப்பத்துடன் இதற்காக நேரத்தைத் திட்டமிடுகிறார்கள். அவர்களும், உடனடி மாற்றத்தை எதிர்பார்ப்பதால், ஏமாற்றம் ஏற்படுகிறது. எதனால் வந்தாலும், எப்படியிருந்தாலும், ஒதுக்குகிற நேரத்தில், பங்கேற்பாளர்களைச் செதுக்குவதுதான் ஒரு பயிற்றுநரின் வேலை.

**? மேலை நாடுகளைப் போல இங்கே மனித வள மேம்பாட்டுப் பயிற்சிக்கான விழிப்புணர்வு இல்லையே, ஏன்..?**

மேலை நாடுகளில், "இன்னும் முன்னேற்றம்" என்பது அனைவரின் மனங்களிலும் பதிக்கப்பட்டுள்ளது. இங்கோ, "போதும் என்ற மனம்" கொள்ளவே, நமக்குப் போதிக்கப்பட்டுள்ளது. அங்கே, சமூகப் பிரச்சினைகளையும் ஒரு தனிமனிதன் போராடி வெல்ல முடியும் என்று நோக்குகிறார்கள். நம் நாட்டில், தனிமனிதப் பிரச்சினைகளையும் சமூகப் போராட்டமாக ஆக்குகிறார்கள். அங்கே இருக்கும் "சிஸ்டத்தில்" ஒவ்வொருவரும் மாறினால்தான் சமூகம் உயரும் எனக் காட்டுகிறார்கள். இங்கே, இருக்கும் ஒவ்வொருவரும் "சிஸ்டம்" மாறினால்தான் சமூகம் உயரும் என ஊட்டுகிறார்கள்.

**? நம்முடைய கூட்டுக் குடும்பமுறை உடைந்து போனதிலிருந்து மனிதவளமும் சிதைந்து போனதாகத் தெரிகிறது. சரியா?**

அது மட்டுமே காரணம் அல்ல; ஆனால், அது ஒரு முக்கியமான காரணம். இன்று மன நல ஆலோசகர்கள் சொல்லும் யோசனைகளை, அன்று வீட்டுப் பெரியவர்களே சொல்வார்கள். அந்தப் பெரியவர்களுக்கு நிதான வாழ்வு, எல்லாவற்றிலும் கற்கும் மனப்பான்மை, விருப்பு வெறுப்பற்ற ஆய்வு, சுய சிந்தனை, அடுத்தவர்கள் மீதான அக்கறை, கேட்க வைக்கும் திறன் என அனைத்தும் வாய்த்து இருந்தது. அந்தப் பெரியோரைத் துணைக் கொண்டு, இளைஞர்கள் முன்னேறினார்கள். இப்போதும் நம்மிடம் வயதானவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால், அனுபவத்தால் பெரியவர்கள் சிலரே.

> **நெறியாக்கல் மட்டுமே**
> **என் பணி. மண்புழுவாய்**
> **உள்ளே துளைக்கிறேன்.**
> **மண்வெட்டியாய்த்**
> **தடைகள் களைகிறேன்.**
> **மழைநீராய்**
> **இரண்டறக் கலக்கிறேன்.**
> **பசுந்தழையாய்**
> **வலிமை குழைக்கிறேன்.**
> **பகலவனாய்**
> **ஒளியை இழைக்கிறேன்.**
> **மனவளத்தால் மண்நலம்**
> **காக்க விழைகிறேன்.**

**? இங்குள்ள மனித வளங்களை ஒருங்கிணைக்க நல்ல தலைமை இல்லை என்பதை ஒத்துக் கொள்ளலாமா?**

நிச்சயமாக! ஆனால், தலைமையைத் தேடிக் கொண்டே இருந்தால், எதுவும் நடக்காது. சமூகத்தை முன்னேற்றும் ஆர்வமும், அக்கறையும் கொண்ட ஒவ்வொருவரும், நான்கு நல்லவர்களையாவது அடையாளம் காண வேண்டும். அவர்களின் வளங்களை மேம்படுத்த வழிகாட்ட வேண்டும். பின்னர், தகுதிகளை வளர்த்துக்கொண்டு வட்டத்தை விரிவடையச் செய்வதன் மூலம், உயர் தலைமையை அடையலாம். "அல்லவை தேய அறம் பெருகும்" என்பது இனிய மொழி. "அறம் பெருக அல்லவை தேயும்" என்பதே இணையும் வழி. அறம் பெருக, திறமும் பெருக வேண்டும்.

**? இந்தப் பயிற்சி என்பது யாருக்கெல்லாம் அவசியமானது?**

இன்னும் கொஞ்சம் நன்றாக வாழ வேண்டும், இன்னும் கொஞ்சம் சிறப்பாகப் பணி செய்ய வேண்டும், இன்னும் கொஞ்சம் அதிகமாக முன்னேற வேண்டும், என்று விரும்பும் அனைவருக்கும், பயிற்சிகள் தேவை.

**? தாங்கள் ஒரு மனிதவள மேம்பாட்டுப் பயிற்சியாளர். தங்கள் பயிற்சியினால் எத்தகைய மாற்றம் நிகழ்ந்துள்ளது?**

இதுவரை, சுமார் ஒரு லட்சம் மனிதர்களின் வாழ்வில், ஒரு சிறிய நன்மையேனும் செய்துள்ளேன். எச்சோகம் கொண்டவரும், உற்சாகம் அடைந்துள்ளனர். தற்கொலைக்கு முயன்ற பலர், வாழும் கலை அறிந்துள்ளனர். தன்னிலை இழந்த பலர், முன்னிலை கண்டுள்ளனர். மதிப்பெண் குறைந்த பலர், மதிப்புக் கூடியுள்ளனர். மதி கூடித் தவறிழைத்த பலர், மாண்புகள் தேடியுள்ளனர்.

இரவல்களில் வாழ்ந்த பலர், உறவுகளில் வென்றுள்ளனர். வெறுமைகளில் வாடிய பலர், உரிமைகள் பெற்றுள்ளனர். உரிமைகள் கோரிய பலர், கடமைகளைக் கற்றுள்ளனர். கடமையாய்ப் பணி செய்த பலர், பெருமையாய்ப் பணியை ஏற்றுள்ளனர். பெருமையே பேசி வந்த பலர், தலைமைக்குத் தயாராகியுள்ளனர். பொய்மையை விரும்பி வந்த பலர், உண்மைக்குத் தாயாராகியுள்ளனர்.

ஆனால், இவை எவையும் என் பயிற்சிகளால் மட்டும் நடந்துவிடவில்லை. உரியவர்களின் ஆர்வமும், உழைப்புமே



அவர்களை மேம்படுத்தியது. இல்லாத ஒன்றை நான் உருவாக்கவில்லை. நெறியாக்கல் மட்டுமே என் பணி. மண்புழுவாய் உள்ளே துளைக்கிறேன். மண்வெட்டியாய்த் தடைகள் களைகிறேன். மழைநீராய் இரண்டறக் கலக்கிறேன். பசுந்தழையாய் வலிமை குழைக்கிறேன். பகலவனாய் ஒளியை இழைக்கிறேன். மனவளத்தால் மண்நலம் காக்க விழைகிறேன்.

விதைப்பவன் இறைவன். விளைவிப்பது அவரவர்கள். நான் வெறும் கருவி மட்டுமே..! இந்தக் கருவி, வாழும் வரை மற்றவர் நலனுக்காகவே உழைக்கும்.

### தங்களின் யோசி நிறுவனம் பற்றி...

*02-03-05*-ல் நான் என் நிறுவனத்தைத் தொடங்கினேன். அது வளர்ந்து, தற்போது "யோசி" என்ற பெயரில், மனித வளம் மற்றும் ஊடக நிறுவனமாக வெற்றி நடை போடுகிறது. எங்கள் நிறுவனத்தின் இணைப்பில் சுமார் *150* பயிற்றுநர்கள் இருக்கிறார்கள். நான் மட்டுமே, இதுவரை *1500*-க்கும் அதிகமான பயிற்சி நிகழ்வுகளை நடத்தியுள்ளேன்.

மற்ற பயிற்றுநர்களின் கணக்கையும் சேர்த்தால், சில ஆயிரங்கள் வரும். இந்த நிகழ்வுகளின் விவரங்கள் அனைத்தும், தேதி வாரியாக எங்கள் இணையதளத்தில் ***(www.yosiindia.com)*** பதியப்படுகின்றன. தமிழ்நாட்டின் *32* மாவட்டங்களிலும், பாண்டிச்சேரி, காரைக்கால் மற்றும் இலங்கையிலும் பயிற்சி அளித்துள்ளோம். பள்ளிகள், கல்லூரிகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் அளித்து வருகிறோம்.

தொழிற்சாலைகள் மற்றும் வணிக நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், தலைவர்களுக்கும் பயிற்சிகளை வழங்கி வருகிறோம். அவரவரின் தேவைகளுக்கேற்ப, பயிற்சியின் உள்ளடக்கம் மற்றும் வடிவமைப்பைத் தயார் செய்கிறோம். எல்லாப் பயிற்சி நிகழ்வுகளிலும் "4ஐ" மாதிரியைப் பின்பற்றுகிறோம். அதாவது, ஒரு பயிற்சியின் நான்கு பக்கங்களான - ஆர்வமூட்டல் ***(Interesting)***, அறிவூட்டல் ***(Informative)***, உரையாடல் ***(Interactive)*** மற்றும் உந்துதல் ***(Inspiring)*** ஆகியவற்றை சம அளவு முக்கியத்துவத்துடன் அணுகுகிறோம்.

### வளரும் பயிற்சியாளர்களுக்குத் தங்களின் அறிவுரைகள்...

எப்போதும் போல், இவர்களுக்கும் நான்கு வேதங்கள் தான்..!

**1. நோக்கத்தில் கண் வை..!** தெரிந்ததை எல்லாம் பேசுவதோ, பொழுதுபோக்குவதோ செய்யாதீர்கள்..! அந்தப் பயிற்சியை நீங்கள் எதற்காக நடத்துகிறீர்கள்? நிகழ்வின் இறுதியில் பங்கேற்பாளர்களிடம் என்ன மாற்றத்தை எதிர்பார்க்கிறீர்கள்? என்ற நோக்கத்தை முடிவு செய்து, அதற்கேற்ப பயிற்சி வழங்குங்கள். பயிற்சியின் நோக்கமும், தாங்கள் பயிற்சியாளராக ஆனதின் நோக்கமும் இயைந்து செல்லுமாறு பார்த்துக் கொள்ளுங்கள். பணம், புகழ் போன்ற வேறு எதனாலும், நோக்கத்திலிருந்து விலகிவிடாதீர்கள்..!

**2. தாக்கத்தால் தடம் பதி..!** சொல்லிவிட்டோ, விளையாடிவிட்டோ சென்று விடுவது பயிற்சியாளர்களின் பணியல்ல. பங்கேற்பாளர்களின் சிந்தனையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். சுய விளம்பரங்களில் கவனம் செலுத்தாது, உங்கள் கருத்துகள் ஏற்படுத்தும் தாக்கத்தில் கவனம் செலுத்துங்கள்.

**3. ஆக்கமே வாயில்..!** அழிவுகளைக் காட்டியல்ல; ஆக்கப்பூர்வமான மனிதர்களை, சம்பவங்களை ஆதாரமாக்கிப் பேசுங்கள்..! சிக்கல்களை நோக்கியல்ல; நடைமுறையில் சாத்தியமான தீர்வுகளை நோக்கி வழிநடத்துங்கள்..! குறைகள் காணாதீர்கள்..! நிறைகளை நிறையச் செய்ய உதவுங்கள்..! இவற்றை முறையாகச் செய்ய, தொடர்ந்து கற்றுக்கொண்டே இருங்கள்..!

**4. ஊக்கத்தைக் கைக்கொள்..!** மற்றவர்களுக்கு ஊக்கம் தரும் பயிற்சியாளர்களின் பணி என்பது பல சவால்கள் நிறைந்தது. எதனாலும் சோர்ந்துவிடாமல், உற்சாகமாய் இருங்கள்..! பிரச்சினைகளை ஏற்றுக்கொள்ளுங்கள்..! சவால்களைச் சந்தியுங்கள்..!

வளமும், நலமும் கூடி வரும்..!

மனித வள மேம்பாட்டுப் பயிற்சியில், உங்களாலும் சாதிக்க முடியும்..!

வாழ்த்துகள்..!